# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

## துறைத் தேர்வுகள் - டிசம்பர் - 2009

## அறிவிக்கை

**2009 ஆம் ஆண்டு 'டிசம்பர்' மாதம் நடைபெறவிருக்கும் துறைத்தேர்வுகளுக்கு விண்ணப்பதாரர்களிடமிருந்து இணையதளம் மூலமாக மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. (விண்ணப்பப் படிவங்கள் தேர்வாணையத்தால் வழங்கப்பட மாட்டாது)**

குறிப்பு: (i) எந்தவொரு துறைத் தேர்வுக்கு விண்ணப்பிப்பவராயினும் விண்ணப்பதாரர் இவ்வறிவிக்கை நாளன்று (அதாவது 27.8.2009) 16 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்.

1. விண்ணப்பதாரர்கள், தேர்வாணையத்தின் இணையதளம் '**www.tnpsc.gov.in** ஆன்லைன் மூலமாக மட்டும் பதிவுக்கட்டணம் ரூ.30 மற்றும் (ஒவ்வொரு தேர்வுக்கும் ரூ.50/-) தேர்வுக்கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்கலாம்..

அ) தேர்வு/விண்ணப்பக்கட்டணங்கள்:- புதுதில்லியை தேர்வு மையமாகக் கொண்டு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களைத் தவிர மற்ற விண்ணப்பதாரர்கள் ஆன்லைன் மூலமாக விவரங்களைப் பதிவு செய்யுமுன், விண்ணப்பிக்க உள்ள தேர்வுகளுக்குரிய தேர்வுக் கட்டணத்தை அறிவிக்கையின் பிற்சேர்க்கை 2-ல் பட்டியலிடப்பட்டுள்ள அஞ்சலகங்களில் ஏதேனும் ஒரு அஞ்சலகத்தின் மூலமாக பெறப்பட்ட அஞ்சலக பற்றுச் சீட்டை கைவசம் வைத்திருக்க வேண்டும். தேர்வுகளுக்கான மொத்த கட்டணத்துடன், விண்ணப்பக் கட்டணமான ரூ.30/- ம் சேர்த்து அதற்கேற்ப அஞ்சலக பற்றுச் சீட்டாக செலுத்த வேண்டும்.

ஆ) தேர்வுக் கட்டணம் தேர்வுகளுக்கான குறியீட்டு எண்கள், பிற்சேர்க்கை-2-ல் பட்டியலிடப்பட்டுள்ள அஞ்சலகங்கள் ஆகிய விவரங்கள் தேர்வாணையத்தின் இணைய தளம் ""**www.tnpsc.gov.in**" -ல் உள்ளன.

இ. **விண்ணப்பதாரர்கள் தங்களது விவரங்களை 30.09.2009 அன்று மாலை 5.45 மணி வரை ஆன்லைன்-ல் பதிவு செய்ய அனுமதிக்கப்படுவார்கள்**. கணினியிலிருந்து பெறப்பட்ட விவரங்கள் அடங்கிய படிவத்தில் விண்ணப்பம் மற்றும் ஆளறிச்சான்றிதழ் ஆகிய இரண்டு இடங்களிலும் கையொப்பமிட்டு அதனை அஞ்சலக பற்றுச்சீட்டு* உள்ளிட்ட இணைப்புகளுடன் **06-10-2009 அன்று மாலை 5.45 மணிக்குள்** தேர்வாணைய அலுவலகத்தை வந்தடையும்படி அனுப்பி வைக்கவேண்டும்.

* இது புதுடில்லி மைய விண்ணப்பதாரர்களுக்குப் பொருந்தாது.

ஈ. தேர்வு / விண்ணப்பக் கட்டணம் செலுத்தியதற்காக பெறப்பட்ட அஞ்சலக பற்றுச்சீட்டினை (ரூ.5/- அஞ்சலக சேவைவரி நீங்கலாக) விண்ணப்பத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் ஒட்டப்படவேண்டும்.

2. **அறிவிக்கை நாள்: 27.8.2009.**

3. **விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 6-10-2009.**

4. **தேர்வுமையங்கள்:** துறைத் தேர்வுகள் கீழ்க்கண்ட மையங்களில் நடைபெறும்.:-

| மையத்தின் பெயர் | குறியீட்டு எண் | மையத்தின் பெயர் | குறியீட்டு எண் |
|---|---|---|---|
| அரியலூர் | 030 | இராமநாதபுரம் | 016 |
| சென்னை | 001 | சேலம் | 017 |
| கோயம்புத்தூர் | 002 | சிவகங்கை | 018 |
| கடலூர் | 003 | தஞ்சாவூர் | 019 |
| தர்மபுரி | 004 | தேனி | 020 |
| | | திருப்பூர் | 112 |
| திண்டுக்கல் | 005 | திருவண்ணாமலை | 022 |
| ஈரோடு | 006 | திருச்சிராப்பள்ளி | 025 |
| காஞ்சிபுரம் | 007 | திருநெல்வேலி | 026 |
| கரூர் | 009 | திருவள்ளூர் | 021 |
| கிருஷ்ணகிரி | 031 | திருவாரூர் | 023 |
| மதுரை | 010 | தூத்துக்குடி | 024 |
| நாகப்பட்டினம் | 011 | உதகமண்டலம் | 013 |
| நாகர்கோவில் | 119 | வேலூர் | 027 |
| நாமக்கல் | 012 | விழுப்புரம் | 028 |
| பெரம்பலூர் | 014 | விருதுநகர் | 029 |
| புதுக்கோட்டை | 015 | புதுடில்லி | 175 |

குறிப்பு : 1.. விண்ணப்பதாரர்கள் தாங்கள் பணிபுரியும் மாவட்டத்தின் தலைநகரில் தான் தேர்வு எழுத வேண்டும். வேறு தேர்வு மையத்தில் தேர்வு எழுத வேண்டுமெனில் அதற்குத் தேர்வாணையத்தின் தனிப்பட்ட அனுமதி பெறவேண்டும்.. இந்த நிபந்தனை பணியில் இல்லாதவர்களுக்கும், தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கும் பொருந்தாது.

2. தேர்வு மையத்தை மாற்றுதல்:- விண்ணப்பதாரர் தான் பணிபுரியும் இடத்தைச் சேர்ந்த தேர்வு மையத்திலேயே தேர்வு எழுத வேண்டும். அவர் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் (அதாவது பணியிட மாற்றம், பயிற்சி, வேற்றுப்பணி) மட்டுமே தேர்வுமையத்தை மாற்றிக் கொள்ள அனுமதிக்கப்படுவார். ஆனால் அதற்கான விண்ணப்பம், தேர்வாணையத்தை 2009 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30ஆம் தேதியோ அல்லது அதற்கு முன்னரோ வந்தடைய வேண்டும். அவ்வாறான கோரிக்கைகள் அலுவலகத் தலைவர் மூலமாகவோ அல்லது தகுதி பெற்ற அதிகாரியிடமிருந்து பெற்ற சான்றிதழுடனோ அனுப்பப்பட வேண்டும். அவ்வாறில்லாமல் பெறப்படும் மைய மாற்றத்திற்கான கோரிக்கை கவனிக்கப்பட மாட்டாது.

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் அனுமதியின்றி தேர்வுக்குரிய இடத்தை மாற்றிக்கொள்ளும் விண்ணப்பதாரரது தேர்வு செல்லுபடியாகாது.

## 5. தேர்வின் கால அட்டவணை

| தேர்வுகளின் குறியீட்டு எண் | தேர்வு நாள் | தேர்வின் தேதி |
|---|---|---|
| 001 – 011 (010 தவிர) | செவ்வாய் கிழமை | 22.12.2009 முற்பகல் |
| 016 - 023 | செவ்வாய் கிழமை | 22.12.2009 பிற்பகல் |
| 029 - 039 | புதன்கிழமை | 23.12.2009 முற்பகல் |
| 044 - 054 | புதன்கிழமை | 23.12.2009 பிற்பகல் |
| 058 - 063 | வியாழன் கிழமை | 24.12.2009 முற்பகல் |
| 067 - 075 | வியாழன்கிழமை | 24.12.2009 பிற்பகல் |
| 081 – 089 (087 தவிர) | சனிக்கிழமை | 26.12.2009 முற்பகல் |
| 094 -098 | சனிக்கிழமை | 26.12.2009 பிற்பகல் |
| 102 – 115 (104 மற்றும் 108 தவிர) | ஞாயிற்றுக்கிழமை | 27.12.2009 முற்பகல் |
| 119 - 132 (124 மற்றும் 127 தவிர) | ஞாயிற்றுக்கிழமை | 27.12.2009 பிற்பகல் |
| 135 - 148 | செவ்வாய்கிழமை | 29.12.2009 முற்பகல் |
| 152 - 164 | செவ்வாய்கிழமை | 29.12.2009 பிற்பகல் |
| 168 - 176 | புதன்கிழமை | 30.12.2009 முற்பகல் |
| 177 - 190 | புதன்கிழமை | 30.12.2009 பிற்பகல் |
| 194 - 206 | வியாழன் கிழமை | 31.12.2009 முற்பகல் |
| 208 மட்டும் | வியாழன்கிழமை | 31.12.2009 பிற்பகல் |
| 209 - 215 | வாய்மொழித் தேர்வு மட்டும் -- இத்தேர்வுகளுக்குரிய நாள் ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் தனித்தனியே தெரிவிக்கப்படும். | |

குறிப்பு:- முற்பகல் தேர்வு காலை 9.00 மணிக்கும் பிற்பகல் தேர்வு மதியம் 2.30 மணிக்கும் ஆரம்பமாகும்..

**6. தேர்வுக் கட்டணம்:-** துறைத் தேர்வில் அடங்கியுள்ள ஒவ்வொரு தேர்வுக்கும் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணம் இணைப்பு-Iல் கொடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பு:- 1 (அ) தேர்வுக்குரிய கட்டணம் அஞ்சலகப் பற்றுச் சீட்டாக மட்டும் செலுத்தப்பட வேண்டும்.

(ஆ) அஞ்சலகப் பற்றுச்சீட்டு:- தேர்வுகட்டணம் அறிவிக்கையின் பிற்சேர்க்கை 2-ல் பட்டியலிடப்பட்டுள்ள அஞ்சலகங்களில் ஏதேனும் ஒரு அஞ்சலகத்தின் மூலமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும். கட்டணம் செலுத்தியதற்காக பெறப்பட்ட அஞ்சலகப்பற்றுச் சீட்டு விண்ணப்பத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் ஒட்டப்படவேண்டும். (இது புதுடில்லி விண்ணப்பதாரர்களுக்கு பொருந்தாது).

விண்ணப்பதாரர்கள் அஞ்சலகப்பற்றுச்சீட்டிலுள்ள விவரங்கள் அனைத்தையும் சரிபார்த்த பின்னரே அவற்றை விண்ணப்பங்களோடு ஒட்டி அனுப்பவேண்டும். அஞ்சலகப் பற்றுச்சீட்டு இணைக்கப்படாமலோ அல்லது இணைத்தனுப்பப்பட்ட அஞ்சலக பற்றுச்சீட்டுகள் குறையுள்ளவையாகவோ அல்லது செல்லாதவையாகவோ காணப்பட்டால் அவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அஞ்சலகப் பற்றுச்சீட்டுகள் டிசம்பர் 2009 துறைத்தேர்வுகளுக்கான அறிவிக்கை விளம்பரம் நாளேடுகளில் வெளியிடப்படும் தேதியன்றோ அல்லது அதற்குப்பின்னரோ பெறப்பட்டதாக இருக்கவேண்டும்..

(இ) புது டில்லியில் உள்ள விண்ணப்பதாரர்கள் தேர்வுக்குரிய கட்டணம் அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கி (Scheduled Bank)/தேசிய மயமாக்கப்பட்ட வங்கி ஒன்றின் ஏதாவதொரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளருக்கு சென்னையில் மட்டும் செலுத்தத்தக்க குறுக்கு கோடிட்ட வங்கிக்

கணக்கு வைத்துப் பணம் பெறுபவர் கேட்பு வரைவொலையாக (Crossed Account Payee Demand Draft) செலுத்தவேண்டும்.

## 7. நிழற்படங்கள்

விண்ணப்பத்துடன் அண்மையில் எடுக்கப்பட்ட ஒரே மாதிரியான இரண்டு பாஸ்போர்ட் அளவிலான நிழற்படங்கள் விண்ணப்பதாரரால் உரியவாறு கையொப்பமிடப்பட்டு ஒட்டி அனுப்பப்படவேண்டும். விண்ணப்பப் படிவத்தில் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் ஒரு படியையும், ஆளறி சான்றிதழில் மற்றொரு படியையும் ஒட்ட வேண்டும். ஆளறிச்சான்றிதழ் விண்ணப்பதாரரால் உரியவாறு நிறைவு செய்யப்பட்டும் கையொப்பமிடப்பட்டும் இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் அரசுப் பணியிலோ அல்லது அரசுச் சார்பு நிறுவனங்கள்/வாரியங்கள்/கழகங்கள்/மாநகராட்சிகள்/நகராட்சிகள்/ஊராட்சி மன்றங்களிலோ பணி புரிபவராயின் அவரது நிழற்படங்கள் அவர் பணிபுரியும் அலுவலகத்தின் தலைமை அதிகாரியால் சான்றொப்பமிடப்படுதல் வேண்டும். சான்றொப்ப கையெழுத்துடன் அலுவலரின் பெயர் மற்றும் பதவியின் பெயரைக் காட்டும் முத்திரையும் பதிக்கப் பெற வேண்டும். மேற்குறிப்பிட்ட அரசு அல்லது அரசு சார்ந்த பணியில் இருப்பவராக இல்லாதிருந்தால் அவரது நிழற்படங்கள் தொகுதி ‘அ’ அல்லது ‘ஆ’ வின் கீழ் வரும் ஓர் அலுவலரால் சான்றொப்பமிடப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரர் தானே தொகுதி ‘அ’ அல்லது ‘ஆ’ வின் கீழ் வரும் அலுவலராயின் அவர் தனது பதவியின் பெயரைக் காட்டும் முத்திரையைப் பதித்து தனது புகைப்படங்களுக்குத் தானே சான்றொப்பமிடலாம். மேற்குறிப்பிட்டவாறு சான்றொப்பமிடப்படாத நிழற்படங்கள் ஏற்றுக் கொள்ளப்படாமல் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும்.

குறிப்பு:- (1) நிழற்படங்கள் விண்ணப்பித்த நாளுக்கு முன்னர் ஒரு திங்களுக்குள் எடுக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

(2) கீழ்க்கண்ட நிழற்படங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலும் இவ்வகையான நிழற்படங்களுடன் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

- (i) சிதைவுற்ற நிழற்படங்கள்.
- (ii) வேறொரு விண்ணப்பத்திற்காக ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட நிழற்படங்கள்.
- (iii) வெவ்வேறு நேர்வுகளில் எடுக்கப்பட்ட நிழற்படங்களின் படிகள்.
- (iv) நிழற்பட அச்சுக்கட்டையிலிருந்து அல்லது அச்சிடப்பட்ட படிகளிலிருந்து எடுக்கப்பட்ட நிழற்படங்கள்.
- (v) ஒளிமநகல்கள் / நிழற்படத்தின் நிழற்படி நகல்கள்.
- (vi) அஞ்சல் வில்லை அளவிலான நிழற்படங்கள்.

8. அனைத்து தேர்வுகளுக்கான பாடத்திட்டம். அதிக அளவு மதிப்பெண்கள், தேர்ச்சி பெறக் குறைந்த அளவு மதிப்பெண்கள் மற்றும் தேர்வின் நேரம் ஆகிய விவரங்கள் 18.12.1991 மற்றும் 28.05.1997 நாளிட்ட அரசிதழ் பாகம் II--பிரிவு 2 (இணைப்பு) மற்றும் 16.07.1992, 16.11.1997 மற்றும் 01.02.2002 நாளிட்ட தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையச் செய்தி வெளியீடுகளில் கொடுக்கப்பட்டுள்ளன. இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைத் தேர்வு, அரசாணை (நிலை) எண். 243, தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறை, நாள் 27.07.2000-ல் ஆணையிடப்பட்டுள்ளபடி நடத்தப்படும்.

9. விண்ணப்பதாரர்கள், மொழி பெயர்ப்புத் தேர்வு மற்றும் மொழித் தேர்வைப் பொருத்தமட்டில் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள மொழியில்தான் விடைகளை எழுத வேண்டும். பிற துறைத் தேர்வுகளை ஆங்கிலத்திலோ அல்லது தமிழிலோ அல்லது விடைத் தாளின் ஒரு பகுதியை ஆங்கிலத்திலும் மறுபகுதியைத் தமிழிலும் கலந்தோ விருப்பப்படி விடையளிக்க அவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

10. தேர்வாணையத்தால் முன்பு வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களையோ அல்லது கையினால் எழுதப்பட்ட விண்ணப்பப் படிவங்ளையோ அல்லது தட்டச்சு அல்லது படிப்பெருக்கி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களையோ அல்லது ஒளிநகல் (Xerox) எடுக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களையோ இத்தேர்வுக்குக் கண்டிப்பாகப் பயன்படுத்தக்கூடாது. அவ்வாறு பெறப்படும் விண்ணப்பங்கள் அத்துடன் விண்ணப்பப் படிவத்திற்கான கட்டணம் இணைக்கப்பட்டிருந்தாலும் அவை ஏற்றுக்கொள்ளப் படாமல் நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரர்கள் அவர்கள் எழுதும்

தேர்வு, தேர்வு மையம் ஆகியவற்றின் பெயர்களையும் அவற்றிற்குரிய குறியீட்டு எண்களையும் விண்ணப்பப் படிவத்தில் சரியாகக் குறிப்பிட்டுள்ளதை உறுதி செய்து கொண்டு அதற்குரிய இடத்தில் கையெழுத்திட வேண்டும்.. தேர்வுகளின் பெயர்கள், குறியீட்டு எண்கள் மற்றும் தேர்வுக்குரிய கட்டணம் ஆகியவை பின்னிணைப்பு-I-ல் கொடுக்கப்பட்டுள்ளன. தேர்வு மையங்களின் பெயர்கள் மற்றும் குறியீட்டு எண்கள் மேலே உள்ள பத்தி-4 ல் கொடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு:-

1. விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட தேர்வுக்கு மாறாக அல்லது கூடுதலாகத் தேர்வு எழுத அனுமதிக்க வேண்டி விண்ணப்பத்தாரரிடமிருந்து கிடைக்கப்பெறும் எந்த ஒரு கடிதமும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள அல்லது தேர்வாணையத்தால் அனுமதிக்கப்பட்ட தேர்வுக்கு மாறாக வேறொரு தேர்வுக்குரிய தாளுக்கு விடையளித்தால் அவ்விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
2. எவ்வகையிலேனும் குறையுடன் கூடிய விண்ணப்பங்கள் எவ்வித நடவடிக்கையுமின்றி தள்ளுபடி செய்யப்படும்.
3. ஒப்பமிடப்படாத விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்படும்.
4. கால அட்டவணை அனுமதிக்கும் தேர்வுகள் எல்லாவற்றையும் எழுதுவதற்கு விண்ணப்பிக்கும் உரிமை விண்ணப்பதாரருக்கு உண்டு. ஒரே நேரத்தில் நடைபெறவிருக்கும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தேர்வுகளை எழுத விண்ணப்பித்திருந்தால், அவர்கள் அத்தேர்வுகளுக்குரிய கட்டணத்தை கட்டியிருந்து அதற்காக இவ்வலுவலகத்திலிருந்து அத்தேர்வுகளுக்குரிய தேர்வு நுழைவுச் சீட்டு அனுப்பப்பட்டிருந்தாலும் விண்ணப்பதாரர் அவருடைய விருப்பப்படி ஏதாவது ஒரு தேர்வு மட்டுமே எழுதுவதற்கு அனுமதிக்கப்படுவார்.
5. எக்காரணத்திற்காகவும் விண்ணப்பதாரருடைய தேர்வு முடிவின் நம்பகத்தன்மையில் தேர்வாணையம் மனநிறைவு கொள்ளாவிடில் அவர் எழுதிய தேர்வின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொருள்களின் மறுதேர்வுக்கு அவர் உட்படுத்தப்படுவார் இம்மறுதேர்வின் முடிவுகளின் அடிப்படையில்தான் அவருடைய வெற்றி அல்லது தோல்வி நிர்ணயிக்கப்படும்.

11. தேர்வு எழுதுவதற்கு அனுமதி வேண்டி விண்ணப்பம் அனுப்பும் விண்ணப்பதாரர், தேர்வுகள் தொடர்பாக தற்போது நடைமுறையிலிருக்கும் விதிகளுக்கு உட்படுவதாக கருதப்படுவர்.

12. (அ) பார்வையற்ற விண்ணப்பதாரர் தனது கரங்களினால் தேர்வு எழுதமுடியாத உடல் ஊனமுற்ற விண்ணப்பதாரர் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு உதவியாளருடன் (Scribe) தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்.

1. பார்வையற்ற விண்ணப்பதாரர் அரசு மருத்துவ அதிகாரியிடமிருந்து <u>“இவர் முழுமையிலும் பார்வையற்றவர்”</u> என்றும் <u>“இவரால் சுயமாகத் தேர்வு எழுத முடியாது”</u> என்றும் அறிவிக்கும் ஒரு சான்றிதழ் பெற்று அனுப்ப வேண்டும். கரங்கள் ஊனமுற்ற விண்ணப்பதாரர் அரசு மருத்துவ அதிகாரியிடமிருந்து <u>ஊனத்தின் தன்மை குறித்தும் மற்றும் அவரால் சுயமாக தேர்வு எழுத இயலாது என்பதற்கும் சான்றிதழ் பெற்று அனுப்ப வேண்டும்.</u>
2. பார்வையற்ற விண்ணப்பதாரர் / கரங்கள் ஊனமுற்ற விண்ணப்பதாரர் விண்ணப்பத்தின் தலைப்பில் பெரிய எழுத்துக்களில் “பார்வையற்ற விண்ணப்பதாரர்” / “கரங்கள் ஊனமுற்ற விண்ணப்பதாரர்” என்று குறிப்பிட வேண்டும்..
3. பார்வையற்ற விண்ணப்பதாரர்கள் / கரங்கள் ஊனமுற்ற விண்ணப்பதாரர்கள் தலைமைக் கண்காணிப்பாளரின் நேரடிப்பார்வையின் கீழ் தனியான அறையிலேயே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர். அவர்கள் தேர்வு எழுதுவதற்கு ஒரு மணி நேரம் கூடுதலாக வழங்கப்படும். விண்ணப்பதாரர்கள் வாய்மொழியாகக்கூறும் அனைத்தும் ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்யப்படும்.
4. உதவியாளர்களை தேர்வாணையமே நியமித்து அவர்களுக்கு ஊதியமும் தேர்வாணையத்தாலேயே வழங்கப்படும்..
5. விண்ணப்பதாரர் தன் வாய்மொழியாகக் கூறியதைத்தான் உதவியாளர் விடைத்தாள்களில் எழுதியுள்ளார் என்பதை உறுதி செய்யும் பொருட்டு அவர் எழுதியதைப் படித்துக்காட்டுவார். இதற்கான சான்றிதழை விண்ணப்பதாரர் பெருவிரல் ரேகை பதிவு செய்து கையொப்பமிட்டு கொடுக்க வேண்டும்..

குறிப்பு:- அறிவுரைகள் (1) மற்றும் (2)-ஐப் பின்பற்றாத விண்ணப்பதாரர் ஊனமுற்றவராகக் கருதப்படமாட்டார்.

(ஆ) கையால் தாள்களைப் பிடிக்க முடியாத மற்றும் திருப்ப முடியாத உடல் இயலாத விண்ணப்பதாரர் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு உதவியாளருடன் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்

1. தேர்வு எழுதும் போது கையால் தாள்களைப் பிடிக்க முடியாத மற்றும் திருப்ப முடியாத நிலையில் உள்ள உடல் இயலாத விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும்போது அரசு மருத்துவ அதிகாரியிடமிருந்து இயலாமையின் தன்மை குறித்தும் மற்றும் இவரால் தாள்களைப் பிடிக்கவும் திருப்பவும் இயலாது என்றும் இதற்காக ஓர் உதவியாளர் தேவை என்றும் குறிப்பிட்டு ஒரு சான்றிதழ் பெற்று விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டும்.
2. விண்ணப்பத்தின் தலைப்பில் பெரிய எழுத்துக்களில் கையால் தாள்களைப் பிடிக்க முடியாத மற்றும் திருப்ப முடியாத உடல் இயலாதவர் எனக் குறிக்க வேண்டும்.
3. இவ்வாறு உதவி செய்வதற்கு எழுத்தறிவு இல்லாத ஒரு நபரை விண்ணப்பதாரரே தன் சொந்த செலவில் நியமித்துக் கொள்ள வேண்டும்.
4. கையால் தாள்களைப் பிடிக்க முடியாத மற்றும் திருப்ப முடியாத உடல் இயலாத விண்ணப்பதாரர்கள், தேர்வுத் தலைமைக் கண்காணிப்பாளரின் நேரடிப் பார்வையின் கீழ் தனியான அறையிலேயே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர். அவர்கள் தேர்வு எழுதுவதற்கு ஒரு மணி நேரம் கூடுதலாக வழங்கப்படும்.

குறிப்பு :- அறிவுரைகள் (1) மற்றும் (2)-ஐப் பின்பற்றாத விண்ணப்பதாரர் உடல் இயலாதவராகக் கருதப்படமாட்டார்.

13. ஒவ்வொரு விண்ணப்பமும் ஆளறிச் சான்றிதழுடன் அஞ்சலக பற்றுச் சீட்டு இணைக்கப்பட்டு உறையின்மேல் கீழ்வரும் விவரமும் முகவரியும் எழுதப்பட்டு பதிவு அஞ்சலில் / துரித அஞ்சலில் அனுப்பப்பட வேண்டும்.

"துறைத் தேர்வுகளுக்கான விண்ணப்பம்"

பெறுநர்
செயலாளர்,
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்.,
அண்ணா சாலை, சென்னை-600 002.

குறிப்பு:- விண்ணப்பங்களை நேரடியாகத் தேர்வாணையத்திற்கு அனுப்ப வேண்டும். விண்ணப்பதாரர் பணிபுரியும் அலுவலகம் மூலமாக அனுப்ப வேண்டியதில்லை.

14. விண்ணப்பதாரர் எவரேனும் தேர்வுக் கூடங்களில் தலைமைக் கண்காணிப்பாளரிடம் அல்லது கண்காணிப்பாளரிடம் அல்லது கண்காணிப்புப் பணியிலிருக்கும் பிற அலுவலரிடம் முறைதவறி நடந்து கொண்டாலோ அல்லது எந்த வகையிலும் ஒழுங்கீனமாகச் செயல்பட்டாலோ அவரது விடைத்தாட்கள் செல்லாததாக்கப்படும். அத்தகைய விண்ணப்பதாரர் மீண்டும் எந்தவொரு தேர்வும் எழுதுவதினின்று நிரந்தரமாகவோ அல்லது தேர்வாணையம் சரியெனக் கருதும் குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்கோ விலக்கி வைக்கப்படுவார். விண்ணப்பதாரர்கள் தேர்வுகள் குறித்து நேரிடையாகவோ அல்லது கடிதங்கள் மூலமாகவோ ஆதரவு நாடினாலும் அல்லது தேர்வாளர், தேர்வாணைய உறுப்பினர் அல்லது தேர்வாணையத்தின் பணியாளர்கள் மீது செல்வாக்கைச் செலுத்த முற்பட்டாலும் அல்லது அன்னாரின் சார்பாக அவர்களது உறவினரோ நண்பரோ புரவலரோ அல்லது அலுவலரோ இவ்வாறு முயற்சித்தாலும் விண்ணப்பதாரர்களுக்கு இத்தண்டனை விதிக்கப்படும்.

தங்களின் தேர்வு முடிவு குறித்து தேர்வாளர்களின் பரிவினைப் பெறுவதற்காக விடைத்தாளில் வேண்டுகோள் விடுக்கும் விண்ணப்பதாரர்களுக்கும் இத்தண்டனை விதிக்கப்படும்..

15. தேர்வுக்கான அனுமதிக் குறிப்பாணை தேர்வு நாளுக்குப் பத்து நாட்கள் முன்னதாக விண்ணப்பதாரருக்கு அனுப்பப்படும். இக்குறிப்பாணை தேர்வு நாளுக்கு ஏழு நாட்களுக்கு முன்வரை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள் அண்மையில் எடுக்கப்பட்ட பயன்படுத்தப்படாத நிழற்படத்தில் உரியவாறு கையொப்பமிட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-600 002 அவர்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இந்நிழற்படம் விண்ணப்பத்தில் ஏற்கனவே ஒட்டப்பட்ட நிழற்படத்தை ஒத்ததாக இருக்க வேண்டும்.. நிழற்படம் இல்லாமல் இது குறித்து வரும் வேண்டுகோளைக் கவனிக்க இயலாது. அனுமதிக் குறிப்பாணை கிடைத்ததும் விண்ணப்பதாரர் அதிலுள்ள பதிவுகள் சரியானவைதானா என்று சரிபார்க்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில் தேர்வாணையத்திற்குத் தகுந்த நடவடிக்கைக்காக அதனை உடனடியாகத் திருப்பி அனுப்ப வேண்டும். தேர்வாணையத்துடன் தொடர்பு கொள்ள வேண்டியிருப்பின் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட விண்ணப்ப எண்களை குறிப்பிட்டு எழுத்து மூலமாக மட்டுமே தொடர்பு கொள்ளவேண்டும். அக்கடிதம் விண்ணப்பதாரர் விண்ணப்பித்துள்ள தேர்வின் பெயர், பதிவு எண், தேர்ந்தெடுத்துள்ள தேர்வு மையம் ஆகிய விவரங்கள் குறிப்பிடப்பட்டு தேர்வாணையத்தின் செயலாளருக்கு மட்டுமே முகவரியிடப்பட வேண்டும். மறுமொழி வேண்டியிருப்பின் மறுமொழி அனுப்பப்பட வேண்டிய முகவரி மற்றும் அஞ்சல் வில்லையுடன் கூடிய உறையினையும் தேர்வாணையத்திற்கு அனுப்ப வேண்டும்.

16. டிசம்பர், 2009 துறைத் தேர்வுகளின் முடிவுகள் 07.03.2010 மற்றும் 16.03.2010 நாளிட்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செய்தி வெளியீட்டில் தேர்ச்சி பெற்றவர்களின் பதிவெண்கள், பெயர் மற்றும் விலாசம் அடங்கிய முழுவிவரப்பட்டியலாக வெளியிடப்படும். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செய்தி வெளியீட்டின் படிகள் தேர்வாணைய அலுவலகத்திலிருந்து வழங்கப்படமாட்டா. தேர்ச்சி பெற்றமைக்குச் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செய்தி வெளியீட்டின் படிகளை உரிய தொகையினைச் செலுத்தி “எழுது பொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநர், வெளியீட்டுக் கிடங்கு, அண்ணா சாலை, சென்னை-600 002” அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்..

தேர்வுகளின் முடிவுகள் தேர்வாணையத்தின் இணையதளம் www.tnpsc.gov.in -லும் காலமுறை தோறும் புதுப்பிக்கப்படும்.

**ரமேஷ் சந்த் மீனா, இ.ஆ.ப.**
**செயலாளர்**